வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 11.6.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி என்பதே அரசின் அசையாத நம்பிக்கை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

ரயில்வே துறையின் 2 முக்கிய ரயில்பாதை இரட்டிப்புத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று, என்சிசி மாணவர்களின் சாகர் சங்க்ராம்- கடல் சாகசப் பயணத்தை, கொடி அசைத்து தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம், முதல் முறையாக NAAC-A-Plus சான்றிதழ் பெற்றுள்ளதாக, பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு தெரிவித்துள்ளார்.

மோடி-கருத்து

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி என்பதே அரசின் அசையாத நம்பிக்கை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். அரசின் சமூக நலத் திட்டங்கள், திறம்பட்ட முறையில் அதிக மக்களை எட்டி வருவது குறித்து, மத்திய தொழிலாளர் துறை அமைச்சர்

டாக்டர் மன்சுக் மாண்டவியா, இன்று, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவிற்கான பதிலில் பிரதமர் இவ்வாறு கூறி உள்ளார். இந்தியாவில் சமூக நலத் திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்ட மக்களின் எண்ணிக்கை, கடந்த 10 ஆண்டுகளில், 19 சதவிகிதம் என்ற அளவில் இருந்து, தற்போது 64.3 சதவிகிதமாக அதிகரித்து இருப்பதாக, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சார்பில், புள்ளி விவரம் வெளியிடப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*புதன்-பதினோராம் ஆண்டு*

இந்தியா, கடந்த 11 ஆண்டுகளில், சேவை, நல்லாட்சி, ஏழைகள் நலன் என்ற கொள்கைகளின் அடிப்படையில், புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளது. இந்த 11 ஆண்டுகளில், பல்வேறு முக்கிய துறைகளில் அரசு மேற்கொண்ட முக்கிய முயற்சிகள் குறித்து, ஆகாஷ்வாணி சிறப்பு தொடர் ஒன்றை வழங்குகிறது. அந்த வரிசையில், நாட்டின் சாலை போக்குவரத்து கட்டமைப்பில் கொண்டு வரப்பட்ட புரட்சிகரமான மாற்றங்கள் குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

*புதன்-பதினோராம் ஆண்டு*

(வாய்ஸ்)

கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா, உள்கட்டமைப்பு துறைகளின் மேம்பாட்டில், முன் எப்போதும் இல்லாத அளவில், முழுமையான ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் கூடிய வளர்ச்சி கண்டுள்ளது. நாட்டில் தற்போது சராசரியாக தினசரி 34 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலைகள் அமைக்கப்படுகின்றன. இது 2014-ஆம் ஆண்டின் அளவை விட 3 மடங்கு அதிக வேகமாகும். பாரத் மாலா திட்டத்தின் கீழ் மொத்தம் 20 ஆயிரம் கிலோமீட்டர் நீளத்திற்கு மேல் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதால், பொருளாதார நெடும்பாதைகள் மேம்பட்டு,

சரக்கு போக்குவரத்து செலவுகளும் குறைந்துள்ளன. 2014-ஆம் ஆண்டிற்கு பின்னர், பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ், 7.8 லட்சம் கிலோமீட்டர் அளவிற்கு சாலைகள் அமைக்கப் பட்டுள்ளதால், கிராமப் பகுதிகளுக்கான போக்குவரத்து இணைப்புகள் 99 சதவிகிதமாக அதிகரித்துள்ளன. பிரதமரின் கதி சக்தி மாஸ்டர் பிளான் திட்டத்தின் கீழ், 44 அமைச்சகங்களும், 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும், GIS தொழில் நுட்பத்தின் அடிப்படையிலான டிஜிட்டல் இணைய தளத்தில் கொண்டுவரப்பட்டு, ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு

*புதன்-பதினோராம் ஆண்டு*

வகை செய்யப்பட்டுள்ளது. கடந்த 11 ஆண்டுகளில். 45 ஆயிரம் கிலோமீட்டருக்கு அதிகமான ரயில் பாதைகள் மின் மயமாக்கப்பட்டு, ரயில்வே துறையின் கட்டமைப்புத் திறன் வலுப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் 333 மாவட்டங்களை இணைக்கும் வகையில் 68 வந்தேபாரத் ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள், அம்ருத் பாரத் நிலையங்கள் திட்டத்தின் கீழ், நவீன மயமாக்கப் பட்டுள்ளன. விமானப் போக்கு வரத்து துறைக்கான உடான் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 88 விமான நிலையங்கள் செயல் பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போது நாட்டின் 23 நகரங்களில் மெட்ரோ ரயில்சேவை மக்களுக்கு வழங்கப்படுகிறது. உலகிலேயே மெட்ரோ ரயில் கட்டமைப்பு வசதிகள் அதிகம் உள்ள நாடுகளில் இந்திய 3-ஆவது இடம் வகிக்கிறது. துறைமுகங்கள் மற்றும் உள்நாட்டு நீர் வழிப்பாதைகள் துறையிலும், இந்தியா பெரிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. இத்துறைக்கான சாகர் மாலா திட்டத்தின் கீழ், துறைமுகத்துடன் இணைந்த 277 உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. ஒற்றுமை சிலையும், உலகிலேயே, மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள, செனாப் ரயில்வே பாலம், மற்றும், 10 ஆயிரம்

*புதன்-பதினோராம் ஆண்டு*

அடி உயரத்தில், உலகிலேயே மிக நீண்டதாக அமைந்துள்ள அட்டல் சுரங்கப் பாதையும், இந்திய பொறியியல் அற்புதங்களின் சிறந்த அடையாளங்களாக, தலை நிமிர்ந்து நிற்கின்றன. மொத்தத்தில் இந்த எல்லா சாதனைகளும் இணைந்து, நாட்டில் போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்தி, உற்பத்தி திறனை அதிகரிப்பதன் மூலம், 2047-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க அடித்தளம் அமைத்து வருகின்றன.

*அமைச்சரவை*

மங்களுர் துறைமுகத்தை, செகந்தராபாத்துடன் இணைக்கும் வகையில், **பெல்லாரி - சிக்ஜாஜூர்** ரயில் பாதையை இரட்டைப் பாதையாக மாற்றும் திட்டம் உட்பட, ரயில்வே துறையின் 2 முக்கிய திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஜார்கண்ட் மாநிலத்தில் நிலக்கரி வளம் அதிகம் உள்ள 4 மாவட்டங்களை இணைக்கும் வகையிலான, **கோடர்மா - பர்க்கானா** ரயில்பாதை இரட்டிப்பு திட்டமும் இதில் அடங்கும். மொத்தம் 6 ஆயிரத்து 405 கோடி ரூபாய் மதிப்பிலான இவ்விரு திட்டங்களால், இந்திய ரயில் பாதைக் கட்டமைப்பின் மொத்த நீளம், 318 கிலோமீட்டர் அதிகரிக்கும் என்று, மத்திய தகவல் - ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*ரங்கசாமி-படகு*

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தேங்காய்திட்டு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து, என்சிசி மாணவ-மாணவிகளின் **சாகர் சங்க்ராம்-பாய்மர படகு கடல் சாகசப் பயணத்தை**, கொடி அசைத்து தொடக்கி வைத்தார். புதுச்சேரி மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பள்ளி-கல்லூரிகளில் இருந்து, என்சிசி கடற்படை பிரிவைச் சேர்ந்த, 25 மாணவியர் உட்பட 60 மாணவ-மாணவியர், அதிகாரிகளுடன் இணைந்து,

இந்த 10 நாள் பயணத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கடலூர், பரங்கிப்பேட்டை, மற்றும், பூம்புகார் வழியாக காரைக்கால் சென்றடைந்து, அங்கிருந்து அதே வழியில் வரும் 20-ஆம் தேதி, மீண்டும் புதுச்சேரி திரும்ப உள்ளனர். செல்லும் இடங்களில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இரத்த தானம், தூய்மைப் பணி, மரம் நடுதல் போன்ற சமூக சேவைகளிலும் இவர்கள் ஈடுபட உள்ளனர்.

*புதன்-விக்சித் க்ரிஷி*

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் **விக்சித் க்ரிஷி சங்கல்ப் அபியான்** பிரச்சார இயக்கம் இன்று புதுச்சேரியில், பாகூர், கரைமேடு, மணலிப்பேட் உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றது. மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு கழகத்தைச் சேர்ந்த முதன்மை விஞ்ஞானி டாக்டர் அட்சயா பாணிகிரகி, கால்நடை பராமரிப்புத் துறை நிபுணர் டாக்டர் பி டி சித்ரா, மற்றும் வேளாண் துறை அதிகாரிகள், இந்த இயக்கத்தின் போது, **அசோலா நீர்ப் பெரணி** வளர்ப்பு, மற்றும், கால்நடை வளர்ப்பில் **பால் கொழுப்பு மேம்பாடு** குறித்தும், விவசாயிகளுக்கான மத்திய-மாநில திட்டங்கள், மற்றும், மண்வள அட்டையின் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு தகவல்களை விவசாயிகளுக்கு வழங்கினர். மொத்தம் 70-க்கும் மேற்பட்ட பெண் விவசாயிகள், மற்றும், 300-க்கும் மேற்பட்ட ஆண் விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பாசிக் மூலம் உர விநியோகம் செய்யவும், மழைக் காலத்தில் விதை நெல்லை மூடி வைக்க தார்பாய் வழங்கவும் தேவை இருப்பதாக விவசாயிகள் அதிகாரிகளிடம் கூறினர்.

*புதுச்சேரி-பல்கலைக் கழகம்*

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம் முதல் முறையாக, NAAC-A-Plus சான்றிதழ் பெற்றுள்ளதாக பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு தெரிவித்துள்ளார். இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நடப்பு கல்வியாண்டில், முதுகலை

காட்சிக் கலை, பி.டெக் சுற்றுச் சூழல் பொறியியல், பிஎஸ்சி உயிரி தகவலியல் உட்பட 6 புதிய படிப்புகள் அறிமுகம் செய்யப்படுவதாக தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் .............

(வாய்ஸ்)

*புதுச்சேரி-பல்கலைக் கழகம்*

<u>(வாய்ஸ்)</u>

புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பில், மாகே, ஏனாம் மற்றும் லட்சத் தீவில், சமுதாயக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்றும், பல்கலைக்கழகத்தின் முதன்மை வளாகம், மற்றும் ஸ்ரீவிஜயபுரம் வளாகத்தில், மத்திய நிதி உதவி மூலம் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு தெரிவித்தார். 100 பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப ஓரிரு மாதங்களில் அறிவிப்பு வெளியாகும் என்றும், ஒப்பந்த அடிப்படையில் உள்ளவர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்து ஆலோசிக்கப் படுவதாகவும் அவர் கூறினார்.

வரும் நவம்பர் மற்றும் டிசம்பரில் பட்டமளிப்பு விழா நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக துணை வேந்தர் தெரிவித்தார். புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் எல்லா படிப்புகளிலும், உள்ளூர் மாணவர்களுக்கு, 25 சதவிகித இடஒதுக்கீடு வழங்குதல் தொடர்பான முடிவு, மத்திய அரசின் வசம் உள்ளதாகவும், அவர்கள் அனுமதி கிடைத்தவுடன், நடைமுறைப் படுத்தப்படும் என்றும், அவர் மேலும் கூறினார்.

*வானிலை*

வரும் 17-ஆம் தேதி வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்றைய தினம் கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்புள்ள வங்க கடல் பகுதிகள் மற்றும் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*கிரிக்கெட்*

உலக கோப்பைக்கான ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன் பட்டப் போட்டிகளில், லண்டனில் இன்று தொடங்கியுள்ள இறுதிப் போட்டியில் டாஸ் ஜெயித்த தென்னாப்பிரிக்க அணியால் முதலில் ஆட பணிக்கப்பட்ட ஆஸ்திரேலிய அணி, சற்று முன் வரை, ----------- ஓவர்களில், ---------- விக்கெட் இழப்பிற்கு, ------------ ரன் எடுத்து இருந்தது.

*மோடி-ஒடிசா*

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 20-ஆம் தேதி ஒடிசாவிற்கு பயணம் மேற்கொண்டு, மாநிலத்தில் முதலாவதாக அமைந்துள்ள பிஜேபி அரசின் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்கிறார். ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் உள்ள ஜனதா மைதானத்தில் நடைபெறும் இம்மாபெரும் விழாவிற்கான ஏற்பாடுகளை சுமுகமான முறையில் மேற்கொள்ளும் பணிகளில், ஒடிசா அரசு 60 ஐஏஎஸ் அதிகாரிகளை ஈடுபடுத்தி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------------